ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

தூத்துக்குடி மாவட்டம்,

கருங்குளம் ஊராட்சி ஒன்றியம்

தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் பணியிடங்களை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் **www.thoothukudi.nic.in** என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பப்படிவங்களை 23.03.2023 தேதி முதல், மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 23.03.2023 தேதி முதல் 24.04.2023 தேதி வரை அலுவலக வேலை நேரத்தில் கருங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
கருங்குளம்.

21/3/23

## இணையதள அறிவிக்கை

ந.க.எண். அ1/ 696/2023

நாள் : 21.03.2023

### தூத்துக்குடி மாவட்டம்
### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.
### அறிவிக்கை (Notification)
### கருங்குளம் ஊராட்சி ஒன்றியம்

**ஒன்றியத்தலைப்பு அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

**(DIRECT RECRUITMENT FOR UNION SIDE OFFICE ASSISTANT & NIGHT WATCHMAN VACANCIES)**

தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றியத் தலைப்பில் காலியாக உள்ள 1 (ஒன்று) அலுவலக உதவியாளர் மற்றும் 1 (ஒன்று) இரவுக்காவலர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடங்களின் விபரம்**

| வ. எண். | பதவி | காலிப்பணியிடத்தின் எண்ணிக்கை | இனசுழற்சி | |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 1 | பட்டியலில் கண்ட சாதியினர் (முன்னுரிமை அடிப்படையின் பேரில் அருந்ததியர்கள்) பெண் ஆதரவற்ற விதவை | |
| 2. | இரவுக் காவலர் | 1 | பொதுப்போட்டி (General Turn) | |

**கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள்**

1. அலுவலக உதவியாளர் - 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.
2. இரவு காவலர் - எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

**வயது வரம்பு 01.07.2022 அன்று அலுவலக உதவியாளர் / இரவுக்காவலர்**

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| | | | **அலுவலக உதவியாளர்** |
| 1. | ஆதிதிராவிடர்<br>(அருந்ததியினர்)பெண்<br>ஆதரவற்ற விதவை | 18 | 37 |

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| | | | **இரவு காவலர்** |
| 1. | பொதுப்பிரிவு | 18 | 32 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 18 | 34 |
| 3. | ஆதரவற்ற விதவை | 18 | 37 |
| 4. | ஆதிதிராவிடர் அருந்ததியர்/ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | 18 | 37 |
| 5. | மாற்றுத்திறனாளிகள் | 18 | அதிகபட்ச வயதுவரம்பை காட்டிலும் கூடுதலாக 10 ஆண்டுகள் சலுகை |
| 6. | முன்னாள் இராணுவத்தினர் | | |
| | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/சீர் மரபினர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் | | 55 வயதிற்குள் |
| | பொதுப்பிரிவு<br>(Rule 52 of T.N.S.T.S Service Rule) | : | 50 வயதிற்குள் |

மேற்கண்ட அதிக வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது. முன்னுரிமை பிரிவினருக்கு அரசு விதிமுறைகளின்படி உச்ச வயது வரம்பில் தளர்வு உண்டு.

**விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்:**

கருங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வேலை நாட்களில் 23.03.2023 முதல் 24.04.2023 மாலை 5.45 மணி வரை.